முருகப்பெருமான் துணை

**மகான் கணபதிதாசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.01.2024**, சனிக்கிழமை

1. வானவர்கள் அருளி காத்திடும்
வல்லமை கொண்ட பிரணவக்குடிலின்
தானதரும வழிமுறைகளை ஏற்று
தரணியோர் வணங்கி வருதலுற
2. வருகவே ஞானிகள் ஆவரென
வாழ்த்தியே சோபகிருது சிலை திங்கள்
இருபானோர் திகதி காரி வாரமும் தனில்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 21 ம் நாள், 06.01.2024, சனிக்கிழமை)
இயம்பிடுவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை கணபதிதாசர் யானும்
அருளுவேன் உலகநலம்பெற
ஆசிதந்து ஞானவழி காட்டிடும்
அரங்கமகானின் அன்னதான வழிகளை
4. வழிகளை உலகமக்கள் ஏற்று
வையகத்தில் தரும சேவையை
அழிவிலா நிலைகாண வேண்டி
அளவிலா பெருமளவில் செய்து வர
5. வருகவே தருமவான்களாகவே
வையகத்தில் அடையாளம் பெற்று
முருகப்பெருமான் அருளாசிக்கு
முழுமைதனை கண்டு சிறப்பர்
6. சிறப்பான ஞானபலம் தரும்
செபதபங்கள் ஞானிகள் பேரில்
அறத்துடன் பூசைகளும் செய்து
அறிவிப்பேன் ஞானம் பயில

7. பயிலவே சுத்த சன்மார்க்க நெறி
பரோபகாரமிக்க சக்திமிக்க
தயவே வடிவானவர்களாக மாறி
தனிப்பெரும் அடையாளம் கூடி
8. கூடியே அரங்கமகா ஞானியின்
குருமார்க்கம் தொடருவதால்
தேடிடும் அரங்கன் வழி வழி
தெரிவிப்பேன் ஞானிகளாக ஆற்றல்
9. ஆற்றல் பெருகி மக்களெல்லாம்
அரங்கனின் ஞானப்படைகளாகி
மாற்றம் உலகினில் புரிவர்
மகா சக்திபலமுற ஞான ஆட்சி
10. ஞான ஆட்சி கலியினில் படைப்பர்
நம்பகமுற மக்களை காத்து
ஞானவழி நடத்தி தீவினை சேரா
ஞானவான்கள் கூடிய சபையாக
11. ஆகவே ஞானிகள் ஆளுகின்ற
அற்புதம் உலகினில் படைத்து
யுகமாற்றம் உலகமாற்றம் புரிவர்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–